# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜா ம க் கா ர ன் JAMAKKARAN

VOLUME - 1 ISSUE - 2

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

✆ 0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



**கர்த்தருக்குள் அன்பானவர்களே,**

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன்.

இந்த மாத ஜாமக்காரனும் ஏற்ற சமயத்தில் உங்கள் கையில் கிடைக்க கர்த்தர் செய்த கிருபைக்காக தேவனை துதிக்கிறேன்.

' இந்த மாதத்துடன் அந்நியபாஷை குழப்பம் என்ற தலைப்பில் எழுதிவந்த தொடரை பூர்ணப்படுத்தாமல் முடிக்கிறேன். புத்தகவடிவில் மீதி உள்ள விவரங்கள் அனைத்தும் பூரணமாக, என்னுடைய முடிவுரையுடன் வெளிவரும் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

' இந்த ஜாமக்காரனில் எழுதப்பட்டசம்பவங்கள், என் விமர்சனங்கள் அனைத்தும் பெந்தேகோஸ்தே சபைகளான TPM,AG,CHURCH OF GOD,IPC ஆகிய சபைகளை சேர்ந்த விசுவாசிகளைவேதனைப்படுத்தும்என்று எனக்குதெரியும். நான் பெந்தேகோஸ்தே சபைகளுக்கு எதிரி என்றும், உங்கள் சபைகளை வெறுப்பவன் என்றும் நீங்கள் கருத நியாயம் உண்டு.

ஆனால் உண்மையாய் மனந்திரும்புதலின் அனுபவத்தை பெற்றவர்களும், வசனத்தின்படி ஜீவிக்கும் எந்த சபை விசுவாசியானாலும் நான் எழுதுவதையும், என் உள்ளானநோக்கத்தையும் விளங்கிக்கொள்ளமுடியும், அப்படி என்னை விளங்கிக்கொள்ள முடியாதவர்களைப்பற்றியும், நான் எழுதியதால் கோபப்படுவார்களைப்பற்றியும் நான் கவலைப்படுவதில்லை.

என் வாசகர்கள் இனிமேலாவது அந்நியபாஷை போன்ற போலி அனுபவங்களில் கவனம் செலுத்தாமல் இருந்தால் அதுவே போதுமானது. அதுவே என் எழுத்துக்கு கிடைத்த வெற்றியாகும். பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக பேசுகிறவர்கள், எழுதுகிறவர்களுக்கு வரும் ஆக்கினை பெந்தேகோஸ்தே சபைகளின் பாஸ்டர்களுக்கும், விசுவாசிகளுக்கும், இதை எழுதுகிற டாக்டர்.புஷ்பராஜ் ஆகிய எனக்கும் பொருந்தும்.

# அக்டோபர் 2016

**' என் உள்ளத்தில் ஏற்பட்ட வசன தெளிவை எனக்குள் வாசம் செய்யும் ஆவியானவர்தான் எனக்கு கொடுத்தார். அந்த தைரியத்தில்தான் இவைகளை எழுத துணிந்தேன்.**

**' மணியாடர், இ-மெயில், ஆன்-லைன் மூலமாக எனக்கு காணிக்கை அனுப்பிய யாவருக்கும் என்னுடைய வாழ்த்துதல்களையும், நன்றியையும் அறிவிக்கிறேன்.**

**' ஒவ்வொரு வாரமும் ஏராளமான வாசகர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே வருகிறது. புதிய வாசகர்களை வரவேற்கிறேன்.**

**தேவகிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக. ஜெபிக்ககேட்டுக்கொண்ட அனைவருக்காகவும் தொடர்ந்து ஜெபிக்கிறேன்.**

**ஜாமக்காரன் அச்சடிக்கவும், தபாலில் அனுப்ப தேவையான ஸ்டாம்ப் செலவும் மிகவும் கச்சிதமாக, சரியான அளவிலே சரியான நேரத்திலே எனக்கு கிடைக்கும் வகையில் வாசகர்கள் யாவரும் பணம் அனுப்பி உதவினீர்கள். கர்த்தருக்கு நன்றியும், உங்களுக்கு என் வாழ்த்துதலையும் கூறிக்கொள்கிறேன். கர்த்தரின் நாமத்துக்கு மகிமை உண்டாவதாக.**

**கர்த்தரின் உன்னத பணியில்**

**✍ டாக்டர். புஷ்பராஜ்**

## வெளிநாட்டு வாழும் வாசகர்கள் கவனிக்கவும்:

' வெளிநாட்டுக்கு அனுப்பும் ஜாமக்காரன் பத்திரிக்கையின் ஸ்டாம்ப் விலை மிக அதிகமானதால் ஒரு ஜாமக்காரனுக்கு 51ரூபாய், 64 ரூபாய் என்று ஸ்டாம்ப் ஒட்ட வேண்டியிருப்பதால் கம்பியூட்டர் வைத்திருப்பவர்கள் உங்கள் ஜாமக்காரனை PDFல் பெற்றுக்கொண்டு அதை டவுன்லோட் செய்து வீட்டில் உள்ள யாவரும் வாசிக்கவும். மற்றவர்களுக்கும் காப்பி எடுத்து உதவவும் வேண்டுகிறேன். ஆகவே எங்கள் **இமெயில்க்கு ஜாமக்காரனை அனுப்பவும்** என்று எங்களுக்கு நீங்கள் எழுதினால் போதும். உங்கள் **இமெயில் ஐடியை** நாங்கள் குறித்துக்கொண்டு ஜாமக்காரனை **அச்சகத்துக்கு அனுப்பும் முன்பே** உங்களுக்கு **PDF வழியாக** பெற்றுக்கொள்ளலாம்.

' இதன்மூலம் லட்சக்கணக்கான ரூபாய்களை ஸ்டாம்ப் வாங்க செலவு செய்யாதபடி **எங்களுக்கு நீங்கள் உதவலாம்.** மற்றவர்களுக்கும் **ஜாமக்காரன்** தேவையானவர்களுக்கும் இதை அறிவியுங்கள்.

' இவ்விஷயத்தில் உங்கள் ஒத்துழைப்பை மிகவும் நாடுகிறேன். வெளிநாட்டில் ஜாமக்காரன் வாசிப்போர் எண்ணிக்கை **மிகவும் அதிகமாக** பெருகிவிட்டது. உங்கள் ஒத்துழைப்புக்கவும். நன்றி.

# அந்நியபாஷை குழப்பம்

# அத்தியாயம் - 7

கடந்த மாதம் I கொ.14:1,2 வசனங்களின் விவரங்களை சரித்திர பூர்வமாய் விளக்கினேன். இனியாரும் ஜெபத்திலே கடவுளோடுபேச கர்த்தர் ஜெபத்தில் **அன்னிய பாஷையை கொடுத்தார்** என்று கூறி சமாளிக்க முடியாது. அவர்கள் பாஷையில் ஜெபத்தில் உளரும்போதே அது போலியானது என்று நீங்கள் விளங்கிக்கொள்ளமுடியும். மற்றவர்கள் முன்னிலையில் பரிசுத்தஆவியின் வல்லமையைப்பெற்றேன் என்று காண்பிக்க வேண்டி அவர்கள் பேசும் பாஷை நூற்றுக்குநூறு **பொய் பாஷை** என்பதை உங்களால் இனி நன்றாக அறிந்து கொள்ளமுடியும்.

**சுவிசேஷ புத்தகத்தில் இயேசு பரிசுத்தஆவியனாவரை கேட்க சொல்லி ஆலோசனை கூறினாரே என்று பலர் எனக்கு எழுதி கேட்டார்கள். முன்பே அதற்கு ஜாமக்காரனில் பதில் அளித்தேன். அன்று பரிசுத்த ஆவியானவரை யாரும் நிரந்தரமாக பெறவில்லை. லூ. 11.13, அது சீஷர்களுக்கு இயேசுகிறிஸ்து கூறிய ஆலோசனையாகும்.**

**யோ 7: 39ல் அதைக்குறித்து இன்னும் தெளிவாக எழுதியிருப்பதை வாசியுங்கள். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியானால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை என்று எழுதப்பட்டிருக்கிறது.**

**அதாவது இன்னும் இயேசு சிலுவையில் அறையப்படவில்லை. இரத்தம் சிந்தவில்லை. இயேசு மரித்து உயிர்தெழுந்து பரமேறி செல்லும் நிகழ்ச்சிதான் இயேசு மகிமைபடும் நிகழ்ச்சி ஆகும். அந்த மகிமை அடையும் நிகழ்ச்சிக்கு பின்தான் மாம்சமானயாவரின்மேலும் பிதா வாக்களித்தபடி ஆவியானவரின் நிறைவு கிடைக்கும். அதுவும் இயேசுவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு வசனத்துக்கு கீழ்படியும்போது மட்டுமே பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்வார்கள். எபே 1:13 ஆவியானவரை ஜெபத்திலோ,உபவாசத்திலோ கேட்டு பெற்றுக்கொள்ளமுடியாது. எத்தனை ஸ்தோத்திரத்தை வேகமாக கைகளை தட்டிசொன்னாலும், உருண்டு புரண்டு கதறினாலும்,ஆவியானவரைப்பெறவே முடியாது. மனம்திரும்புங்கள்!!. ஆவியானவரைப் பெற்றுக்கொள்வீர்கள்.**

1 கொ. 14: 14 நான் **அந்நியபாஷையிலே** விண்ணப்பம் பண்ணினால் அதாவது சபையில் எல்லாரும் ஜெபிக்கும்போது என் சொந்த பாஷையில் ஜெபம் பண்ணாமல் நான் ஏற்கனவே கற்றுக்கொண்ட, கொரிந்து சபையில் உள்ள யாராவது ஒருவரின் பாஷையில் நான் **ஜெபம் செய்தால் சபையில்உள்ள அந்த பாஷையை அறிந்தவன் நிச்சயமாக புரிந்துக் கொள்ளுவான். ஆண்டவரும் அந்த பாஷையை புரிந்துக்கொள்வார்.**

ஆனால் என் எண்ணம், என் கருத்து யாவும் என் ஜெபத்தை கேட்கும் அவர்களுக்கு பிரயோஜனப்படாது எனக்கு நான் என்ன ஜெபித்தேன் என்று விளங்காமல்போகும். ஆனால் நான் அவர்கள் பாஷையில் செய்த ஜெபம் சபையில்உள்ள அந்த பாஷை தெரிந்தவர்களை ஜெபத்தில் நடத்த உதவியாகஇருக்கும்.

எனக்கு என் ஜெபம் **பிரயோஜனபடவேண்டுமானால்** என் **சொந்த பாஷையில்** ஜெபத்தில் பேசுவதே எனக்கு நலமானதாக இருக்கும். மற்றபடி சபையில் செய்த **என் ஜெபம் பயனற்றதாகவே** போகும்.

இந்த சம்பவங்கள் யாவும் **வேத புத்தகம் எழுதப்படாத** முன்புஉள்ள காலத்துகுறியது என்பதை கவனிக்கவேண்டும்.. அந்த காலகட்டத்தில் **பாஷை** பிரச்சனைகளில் அகப்பட்ட கொரிந்து சபையில் உண்டான இதுபோன்ற சம்பவங்கள் **இன்றைய காலத்துக்கு** பொருந்தாது. அதை பின்பற்றவும் கூடாது.

நம் **சொந்த பாஷையில் வேதபுத்தகம் இன்று நமக்கு கிடைத்துவிட்டது**. நம் சொந்த பாஷையில் மனம்விட்டு தெய்வத்தோடு பேச இன்று தேவன் நமக்கு கிருபை அளித்துள்ளார்.

இந்தக் காலத்தில் பலர் **கர்த்தர்** சபையில் உள்ள அனைவரையும் அன்னியபாஷையில் பேசும்படி கர்த்தரே அருளுகிறார் என்பவர்களிடம் ஜாக்கிதையாக இருங்கள்.

உதாரணமாக சபையில் **ஹிந்தி பாஷை** அல்லது **ஆப்பிரிக்க** பாஷையில் பிரசங்கங்கள் செய்பவர்களுக்கு எதற்காக **சபை பாஸ்டர்** மொழி பெயர்ப்புக்கு ஒரு ஆளை நியமிக்கிறார். இவர்களின் கூற்றுபடி **அன்னியபாஷையை** மொழிபெயர்க்கும் வரம்பெற்றவர்கள் சபையில் இருந்தால் அவர்கள் தங்கள் ஆவியின் நிறைவில் இவர்களின் பாஷையை மொழி பெயர்க்கலாமே?.

அப்படி செய்யாமல் மொழிபெயர்ப்பாளரை வெளியிலிருந்து ஏன் கூட்டிவருகிறார்கள்?. பாஸ்டர்க்குமே நிறைய **அந்நியபாஷை பேச தெரியுமே**? அவரேகூட மொழி பெயர்த்திருக்கலாமே!.

பொதுவாக வாசகர்கள் அறியவேண்டியது. **பெந்தகோஸ்தே சபையினரின்** அன்னியபாஷையைக்குறித்து கொஞ்சம்கூட சந்தேகப்படாமல் **அது பொய்யானது, மாயமாலமானது, அது அர்த்தம் இல்லாதது, அது கர்த்தரால் பேசவைப்பது அல்ல என்பதை தெளிவாக புரிந்துக்கொள்ளுங்கள்.**

நம் கர்த்தர் **ஞானமுள்ளவர் அதிசயங்களை** செய்பவர். சபையில் அல்லது நம் வாழ்வின் சூழ்நிலைக்கு ஏற்றபடி **பாஷை வரங்களை** பயன்படுத்துவார். வேதத்தின்படி இதுதான் உண்மை.

# கழுதையை மனிதன் பாஷையில் பேசவைத்த தெய்வம் எண்.22:28

கர்த்தருடைய ஊழியக்காரன் கர்த்தரின் திட்டத்துக்கு எதிராக செயல்பட **கழுதையின் மேல் ஏறி பயணம்** செய்தான். **கர்த்தர்** அவனை தடுக்க தூதனை அனுப்பினார். வழியில் குறுக்கே நின்ற தூதனை **கழுதை** கண்டது. ஆனால் ஊழியக்காரன் கண்ணுக்கு தூதன் தெரியவில்லை. கர்த்தரின் வார்த்தைக்கு விரோதமாக ஒரு ஊழியன் செயல்படும்போது அவன் கண்களுக்கு முன் தேவகோபம் மறைக்கப்படுகிறது. ஆனால் கழுதையின் கண்கள் அதைக்கண்டது. கழுதை அப்படியே கீழே படுத்துக் கொண்டது. அதற்குமுன் பலமுறை அந்த கழுதை தன் எஜமானனை எச்சரிக்கை செய்யும் விதத்தில் ஊழியக்காரனின் பயணத்தை பல விதத்தில் தடுத்தது. ஆனாலும் அவன் பணத்துக்காகவும் பணத்தின்மேல்உள்ள ஆசையால் **பொய் திர்கதரிசனம்** கூற தீவிரித்து மீண்டும் பயணம் செய்யவேண்டி கழுதையை பிரம்பால் அடித்து விரட்டினான், கழுதையை எழுந்திருக்கும்படி அதை அடித்தான்.

இப்போது ஒரு அற்புதம் நடக்கிறது. கழுதையின் வாயை கர்த்தர் திறந்தார் என்று வேதம் கூறுகிறது. உடனே கழுதை பேசியது. **தேவதிட்டத்தையும் தவறான தீர்கதரிசனம் சொல்லசென்ற ஊழியனையும் கழுதை தன்வாயால்** ஊழியனோடு பேசி தடுத்தது.

**இப்போதுதான் ஊழியனின் கண்களை கர்த்தர் திறந்தார்.** கர்த்தர் ஊழியனின் கண்களை திறந்தார் என்று 31ம் வசனம் கூறுகிறது. உடனே ஊழியனும் தன் தவறை உணர்ந்து தன் **தவறான ஊழியத்தை** சரி செய்துக்கொண்டான்.

## அன்பான அனைத்து பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்களே, விசுவாசிகளே!.

ஊழியனின் தவறான போதனையை கர்த்தர் உணர்த்த **ஒரு கழுதையை** உபயோகிக்க வேண்டிய அவசியம் வந்தது. அந்த **கழுதையை** கவனியுங்கள். கழுதை தன் **மிருகபாஷையில்** ஊழியனோடு பேசாமல், ஊழியக்காரனுக்கு என்ன பாஷை தெரியுமோ, அவனுடைய பாஷையில் தேவ திட்டத்தைப் பேசி விளங்க வைத்தது.

ஒரு கழுதை ஊழியக்காரனுடன் பேசும் ஒழுங்கை கவனித்து பாருங்கள். கழுதைக்கு வேத ஒழுங்கு விளங்குகிறது. மிருகபாஷையில் மனிதனிடம் பேசுவது வேஸ்ட் என்று கழுதை விளங்கிக்கொண்டது. ஆகவே ஊழியக்காரன் பாஷையிலேயே பேசுவோம் என்று தன்வாயை திறந்து அந்த கழுதை ஊழியக்காரனோடு பேசும்போது 6அறிவுபெற்ற ஊழியனுக்கு வேதம் அறிந்த அல்லது பாஸ்டர்களுக்கு, விசுவாசிக்கு ஒரு கழுதைக்கு உண்டான புரிதல்உணர்வுகூட மனிதனுக்கு இல்லாமல் போனதேன்?. **கடவுளுக்கு சகல பாஷையும் தெரியுமே!** என்ற அறிவு பாஸ்டர்மார்களுக்கு இல்லாமல் போனதேன்?.

நிறைய பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள் கூறுவதை நான் கேட்டிருந்தேன். ஒரு குழந்தை **தத்தக்க! புத்தக்கா!** என தன் தாயிடம் பேசும்போது அருகில் இருக்கும்

நமக்கு அந்த குழந்தையின் பாஷை விளங்காது. ஆனால் பெற்ற தாய்க்கு தான் அந்த குழந்தை எதைக்குறித்து பேசுகிறது?, என்ன கேட்கிறது? என்பது விளங்கும் ஆனால் நமக்கு விளங்காது. இப்படிப்பட்ட சிறுபிள்ளைகளின் உதாரணங்களை இந்த பாஸ்டர்கள் பேசி அதை கேட்டு கேட்டு புளித்துப்போய்விட்டது. இந்த உதாரணத்திலே நியாயம் இருப்பதுபோல் தெரியும். ஆனால் இது சம்பந்தம் இல்லாத உதாரணம் ஆகும். மேலும் சமாளிக்கும் உதாரணம் ஆகும்.

விசுவாசிகளான நாம் என்ன **குழந்தைகளா?** விசுவாசத்தில் குழந்தைகள் போன்ற நாம் ஆவிக்குரிய **ஜீவியத்திலே வளரவேண்டும்** என்று 1 பேது 2: 3ல் பேதுரு கூறுகிறாரே. இன்னும் எத்தனை நாட்களுக்கு குழந்தைகளைப்போல் வாயில் விரல்வைத்து **சப்பிக் கொண்டிருப்பீர்கள்!. வசனத்தில் வளரவேண்டாமா?** தெளிவான வார்தையில் நீங்கள் பேசாவிட்டால், **நீங்கள் பேசுவது என்ன** என்று எப்படி விளங்கும் என்று பவுல் எழுதினாரே. 1 கொரி 14:8-10. மூளை வளர்ச்சியற்ற பிள்ளையைப்போல பைத்தியம் பேசுவதுபோல நீங்கள் கருதப்படுவீர்கள்.

ஆகவே **பரிசுத்தஆவியினால் நிரப்பப்படும்** இந்த அனுபவம் குறிப்பிட்ட ஒரு சபைப் பிரிவினர்க்கே (அதாவது பெந்தேகோஸ்தே சபை பிரிவினருக்கே) என எண்ணப்பட்டு வந்த காலமெல்லாம் மலையேறிவிட்டது. **விசுவாசிகளான** நாம் யாவரும் **பரிசுத்த ஆவியனால்** நிரப்பப்படவேண்டியது அவசியம்.

**அந்நியபாஷையை** சபை மக்கள் பேச கர்த்தர் சொல்லவில்லை. அந்த காலத்து சபைக்கு அந்நியபாஷை வரமாக மட்டுமே கொடுக்கப்பட்டது. **வரம்**(GIFT) **கர்த்தர் தான் கொடுப்பார்** சபை மக்கள் யாவரும் பேச அல்ல, **அந்நியபாஷையை** பேச முயலவேண்டாம் என்று எழுதும் என்னை டாக்டர் பரிசுத்தஆவியை **இல்லை** என்று மறுக்கிறார் என்கிறார்கள். **பரிசுத்த ஆவியானவருக்கு டாக்டர்.புஷ்பராஜ் எதிரி** என்று வாய் கூசாமால் பேசுகிறார்கள். இவ்வளவு எழுதியும் இன்னும் பெரும்பாலோர் என்னை விளங்கிக்கொள்ளாமல் இருப்பது மிகவும் வேதனை தருகிறது.

இப்படி சொன்னதையே திரும்பதிரும்ப கூறி உளரும் வார்த்தைக்கு **அன்னியபாஷை** என்று அதற்கு பெயர் வைத்து இப்படி தவறாக பேசிபேசியே சபை மக்களை திருச்சி **பாஸ்டர்.நார்மன்** ஏமாற்றினாரே?, சென்னையில் உள்ள பல பாஸ்டர்மார் அவரைப்போலவே மக்களை ஏமாற்றிக் கொண்டிருப்பதை **போலீஸ் கண்டுபிடித்த பிறகுதான்** சபை மக்களுக்கு உண்மை தெரிகிறது.

தினசரி பத்திரிக்கையில் பக்கம் பக்கமாக பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்களின் லீலைகள், பண ஊழல்கள்பற்றி எழுதியும், மக்கள் தெளிவு பெறவில்லையானால் இவர்களை இன்னும் எப்படிதான் விளங்க வைப்பது?!.

**அன்னியபாஷைப்பற்றி** இப்படி உளரல் என்றெல்லாம் மற்றவர்கள் பேசுகிறார்களே! நாம் பேசும் பாஷையை நாமே **ஆராய்ந்து பார்ப்போம்** என்று ஒரு நாளாவது அவரவர்கள் பேசும் பாஷையை ஆராய்ந்து பார்ப்பீர்களேயானால் நீங்களே வெட்கப்பட்டுபோவீர்கள். நான் இப்படியெல்லாம் **அர்த்தம் இல்லாமல் உளறினேனே** என்று ஆச்சரியப்படுவீர்கள்? வெட்கப்படுவீர்கள்?.

# வரங்கள் (GIFT)

வரங்கள் 22 ஆகும்.(9 வரங்கள்அல்ல), **அன்னியபாஷை வரம்** என்பது புதிய ஏற்பாட்டு சபைக்கு மட்டும் கர்த்தர் சபை மக்களோடு பேசுவதற்காக கொடுக்கப்பட்டதாகும். மற்றபடி மனிதன் கடவுளோடு பேசுவதற்காககல்ல?.

மனுஷன் ஒரு நாளும் **அன்னிய பாஷை மூலமாக** கர்த்தரிடம் பேசமுடியாது. அவரவர் **தாய் பாஷையில்** ஜெபித்தால்போதும். நம்முடைய தெய்வத்துக்கு உலகத்தில் உள்ளவர்பேசும் சகலபாஷைகளும் தெரியும். ஜெபத்தில் நம்மை உளரவைத்து **பைத்தியக் காரர்களாக்குகிறார்கள். நமக்கு தொல்லைக்கொடுக்கும் தெய்வம் அல்ல.மீகா 3.8.**

பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனம் நிறைவேறுதல்தான் புதிய ஏற்பாடு என்பது! நியாய பிரமாண புத்தகம் தீர்க்கதரிசன புஸ்தங்களும், சங்கீதங்களும் சுட்டிக்காட்டும் கிருபையே வரம் ஆகும். லூாக். 24 : 25,27,44. யோ 1: 45, 5: 39,11: 8,57 புதிய ஏற்பாட்டு சபையின் ஆரம்பகாலத்தில் அப்போஸ்தலர்களும்,சுவிசேஷகர்களும் பரிசுத்த ஆவியினால் வேதவசனங்களை விவரித்து விசுவாசிகளை வசனத்தில் உறுதிபடுத்தனார்கள்.

இயேசுவை வெளிபடுத்த சபைக்கு அருளப்பட்ட ஆவிதான் **தீர்க்கதரிசன ஆவியாகும்.** 1கொ 16 : 31, வெளி 19 : 10 **ஆத்மீக** வரங்களையும் குறிப்பாக தீர்க்கதரிசன வரங்களையும் வாஞ்சிப்பீர்கள் என்று பவுல் கூறியதின்(1கொரி : 14 : 1) அடிப்படை காரணம் இதுவேயாகும். **தீர்க்கதரிசன வரங்களை கேளுங்கள்** என்று கூறவில்லை என்பதையும் நீங்கள் அறியவேண்டும்.

**சபை** என்ற சரீரத்தின் அவயங்களை செயல்படுத்த கிருஸ்து ஆவிக்குறிய வரங்களை தருகிறார்.

அந்த ஆவிக்குரிய வரங்களில் ஒன்றுதான் **தீர்க்கதரிசனம்.** தீர்க்கதரிசிகள் **தெய்வ வார்த்தைகளை** சபைக்கு கூறினார்கள். அப்போஸ்தவர்கள் மட்டும் ஆவி விசுவாசிகளுக்கு (அப 15:32) புதிய ஏற்பாட்டு சபையின் தீர்க்தரிசன **கர்த்தரின் வசனத்தை** உபயோகித்து விசுவாசிகளுக்கு பக்திவிருத்தியை உண்டாக்குகிறார். தீர்கதரிசனத்தை வசனத்தின் வழியாகத்தான் கர்த்தர் தன் சொந்த விருப்பப்படி அதை வெளிபடுத்துகிறார். அப் 13:1. அதனால் **தீர்க்கதரிசனத்தை அற்பமாக என்ன கூடாது** என்று வேதம் எச்சரிக்கிறது 1 தெச 5: 20.

I கொரி . 12 : 30
I கொரி . 14 : 23, 27,28

# வரங்கள் (GIFT)

ஆவிக்குரிய **வரம்** என்பது வேதத்தில் 3 இடங்களில் காணப்படுகிறது.

ரோ. 1 : 11, 1கொரி. 12 : 1,14. இதில் ரோ 1:11 மாத்திரமே **ஆத்மீக வரம்** என்ற மூலவார்த்தையில் எழுதப்பட்டுள்ளது.

கர்த்தரிடமிருந்து **கிருபையால் கிடைக்கும் (GIFT) பரிசுதான்** அல்லது **வரம்தான் கிருபாவரம்** என்பது ஆகும். பரிசுத்தஆவியானவர் குறிப்பிட்ட விசுவாசியை கருவியாக உபயோகிப்பதுதான் **ஆவிக்குரிய வரங்கள்** என்பதாகும். இது ஒரு விசுவாசி

தனிப்பட்ட முறையில் தனித்து செய்யும் செயல் அல்ல. **கிருபாவரம் ஆத்மாவின் வெளிச்சம்** ஆகும். I கொ. 12: 7

## ஆத்மீக வரத்தின் விசேஷங்கள்

1. **ஆத்மீக** வரத்தை கொடுப்பது தெய்வம்.
2. எல்லா விசுவாசிகளுக்கும் **கிருபா வரம்** கிடைக்கிறது.
3. **கிருபா வரம்** கிடைக்காத விசுவாசிகள் யாரும் இல்லை. I கொ. 12 : 7
4. **கிருபாவரம்** உபயோகிப்பது அன்பின் அடிப்படையில் இருந்தாலே அது பிரயோசனப்படும் .1 கொரி. 13. அன்பு இல்லை என்றால் அந்த வரம் இருந்தும் பிரயோனமில்லை.

## ஆத்மீக வரங்களின் எண்ணிக்கை

ரோ. 12 : 6 - 8
I கொரி. 12 : 7 - 11
I கொரி 12 : 28 -30
எபே 4 : 11 - 13
I பேது 4 : 10 , 11

## ரோ . 12 : 6 -8

1. **தீர்க்கதரிசனம்** - ரோ. 12 : 6 - 8 I கொ. 12 : 10 எபே 4 : 1
2. **ஊழியம்** - ரோ 12 : 7. 1 பேது 4 : 11
3. **உபதேசம்** - ரோ 12 : 7 I கொரி12 : 2. எபே 4 : 11
4. **போதிப்பது** - ரோ 12 : 7
5. **உதவி செய்தல்** - ரோ 12 : 8
6. **கண்காணிப்பு** - ரோ 12 : 8
7. **இரக்கம் பாராட்டல்** - ரோ 12 : 8
8. **திருமண வாழ்க்கை** - I கொ 7 : 8
9. **திருமணம் இல்லாத வாழ்க்கை** - I கொ. 7-8

## II 1 கொரி. 12 : 7 -11

10. **ஞானத்தின்** வசனம் - I கொ 12 : 8
11. **அறிவை உணர்த்தும்** வசனம் I கொ 12 : 8
12. **விசுவாசம்** - I கொ 12 : 9
13. **சுகமளிக்கும்** - I கொ 12 : 9, 28
14. **சக்தி** - I கொ 12 :16
15. **ஆவியை பகுத்தறிதல்** - I கொ 12 : 10
16. **பல பாஷைகள்** - I கொ 12 : 10

17. **பாஷைகளை குறித்து வியாக்கியானம் -** I கொ 12 :10

**III. I கொ. 12 : 28 - 30**

18. **அப்போஸ்தலர்** - I கொ 12 : 28 எபே 4: 11
19. **தீர்கதரிசனம்** - I கொ 12 : 28 எபே 11
20. **உதவிகள் செய்வது** (ஆங்கிலத்தில்) - I கொ 12 : 28
21. **ஆளுகைகள்** - I கொ 12 : 28

**IV. எபே 4 : 10, 11**

22. **சுவிசேஷகர்கள்** - எபே 4 : 11
23. **மேய்பவர்கள்** - எபே 4 : 11

ஆனால் பேதுருவோ வரங்களை இரண்டு பாகங்களாக உபயோகிக்கிறார்.

1. **பிரசங்கம்** 2. **ஊழியம்** 1பேது 4 : 11

## வாசகர் கடிதங்கள்: 1

இத்தனை வருடங்கள் நான் எத்தனை முட்டாளாய் இந்த **பாஷையை** பழக்கப்படுத்தி கொண்டேன். கர்த்தரையே நான் ஏமாற்றியிருக்கிறேன் என்பது உங்கள் ஜாமக்காரனை வாசித்தப்பிறகு தான் நான் தெளிவுப்பெற்றேன். உங்கள் ஜாமாக்காரன் பல ஆயிரம் மக்களை தெளிவுபடுத்தியிருக்கும். நன்றி, ஐயா.

இப்படி ஏராளமானவர்கள் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். இவர்களை தெளிவுப்படுத்தியது என் ஜாமாக்காரன் அல்ல. நம் கையில்உள்ள **வேதபுத்தகம் தான்.** அந்த வேதத்தை நமக்கு அளித்து **சரியான வழியை** நமக்கு காண்பித்த நம் தேவனுக்கும் அதை எழுதி தந்த **ஆவியானவருக்கும்** நன்றி கூறி அந்த ஆவியானவரை நமக்கு அளிக்கும் அதிகாரம்பெற்ற **கர்த்தராகிய இயேசுகிருஸ்துவுக்கு துதியும் மகிமையையும்** செலுத்துங்கள்.

**குறிப்பு: அந்நியபாஷையைக்குறித்து** தொடர்ந்து மாதாமாதம் ஜாமக்காரனில் எழுதுவதால் பலருக்கு **சலிப்பு,** பலருக்கு **தேன் அமுதம்.**

இப்படி பல்வேறு விதமாக ஆவிக்குரிய வளர்ச்சியில் குறைந்தவர், வளர்ந்தவர்கள் என்று ஜாமக்காரன் வாசகர்களாக இருக்கிறார்கள். என்றாலும் எழுதி அறிவிக்கவேண்டிய முக்கிய விஷயங்களை அறிவித்துவிட்டேன். **அந்நிய பாஷையைப்பற்றி** இன்னும் நிறைய விஷயங்கள் உண்டு. அவைகளை புத்தகமாக்கும்போது அத்தனையும் எழுதுவேன். **அந்நியபாஷை குழப்பம் விஷயங்களை** இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன். வாசித்த அனைவரும் தெளிவாகிஇருப்பீர்கள் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன். நன்றி. ***************

# AOG சபையில் பண ஊழல் திருச்சி AOG சபை பாஸ்டர்.நார்மன் அவர்களின் பண ஊழல்

திருச்சியில் உள்ள பிரபல AG சபையின் **பாஸ்டர்.நார்மன் பாஸ்கர்** அவர்கள் ஏராளமான பணஊழல் வழக்குகளில் சிக்கியிருக்கிறார். போலீஸ் விசாரணை தொடங்கி உள்ளது.

ஏராளமான வாலிபர்களை, வாலிப பெண்களை கவர்ந்த பிரபலமான சபைதான் திருச்சியில் உள்ள **AG சபை.** நல்ல வளர்ச்சிப்பெற்ற அந்த சபையின் இப்போதுள்ள கட்டிடத்தில் மக்கள் அமர வசதியில்லை என்று வேறொரு இடத்தில் மிக பிரமாண்டமான முறையில் மிகப்பெரிய சபைக்கட்டிடம்கட்ட சபைமக்களிடமும், வெளியில்உள்ள பணக்கார கிருஸ்தவ வியாபாரிகளிடமும் லட்சகணக்கில் பணத்தை கடனாக பாஸ்டர் **நார்மன்** வாங்கியதாகவும், புதிய சபை கட்ட அவர் வாங்கிய நிலம் **ஏரிநிலமாகவும், புறம்போக்கு நிலமாகவும்** அமைந்ததால் அந்த இடத்தில் சபை கட்ட அரசாங்கத்தின் தடை ஏற்படப்போகிறது என்பதை கடன் கொடுத்த சபை மக்களும், கடன் கொடுத்த ரியல் எஸ்டேட் ஆட்களும் அறிந்தவுடன் பாஸ்டரிடம் தாங்கள் கொடுத்த பணத்தை திரும்ப கொடுக்கும்படி பாஸ்டரிடம் கேட்க தொடங்கியுள்ளார்கள்.

சபை விசுவாசிகளில் பலர் தங்கள் நகைகளை அடமானம்வைத்து கிடைத்த அந்தப் பணத்தை **புது ஆலயம் கட்ட பாஸ்டரிடம்** கொடுத்துள்ளார்கள். 6 மாதத்தில் அந்த பணத்தை திருப்பித் தந்துவிடுகிறேன் என்று சபை ஆராதனையில் அறிவித்தவர் இதுவரை பணத்தைக் கொடுக்கவில்லை. இப்போது வருடகணக்கில் வாய்தா நீண்டுப்போனதால் வட்டி அதிகமாகி என்ன செய்வது என்ற அறியாமல் சபை மக்கள் பலர் அதன் விவரத்தை வேதனையோடு எனக்கு அறிவித்துள்ளனர்.

இந்து மதத்திலிருந்து இயேசுவை ஏற்றுக்கொண்ட நல்ல விசுவாசியான ஒரு வாலிப தம்பி **6 லட்சம் பணத்தை** பாஸ்டரிடம் கொடுத்து இப்போது அந்த பணத்தை பாஸ்டமிருந்து திரும்ப பெறமுடியாமல் மிகவும் மனவேதனையுடன் இருக்கிறார். அந்த புதியவிசுவாசி **பாஸ்டர் உண்மையுள்ளவர்** என்று நம்பி அவர் கொடுத்தவாக்கை காப்பாற்றுவார் என்றும் நம்பி ஏமார்ந்துபோனேனே என்று இப்போது மனவேதனைப்படுகிறார்.

விக்கிரக பிடியிலிருந்து வெளிவந்து உண்மையான தெய்வத்தை நம்பின அந்த புது ஆத்துமா பாஸ்டருடைய **பொய்வாக்கும் ஆவியில் நிறைந்து பேசுகிறேன்** என்ற அவரின் **அன்னியபாஷையை, தீர்க்கதரிசனத்தை** நம்பி அவரின் மாயமான வாழ்க்கையும் கண்டு அறிந்து இப்போது பின்வாங்கிபோன நிலையில் உள்ளார்.

VGP என்ற பெரிய பணக்காரரிடம் பொய்யான சபையில் நில பத்திரங்களை கொடுத்து கோடிகணக்கில் பணம்பெற்றதாகவும் பத்திர ஏமாற்றை அந்த ஸ்தாபனத்தினர் தெரிந்தவுடன் அவரின் ரௌடிகள் சபையையும் பாஸ்டர் வீட்டையும் சுற்றிவளைத்தாரர்கள் என்று கேள்விபட்டேன். சாட்சிகெட்ட இப்படிப்பட்ட அந்த பாஸ்டர் பேசும் **அன்னியபாஷையை** குறித்து இதை வாசிக்கிற நீங்கள் என்னவென்று கூறுவீர்கள். இவர் குடும்பமும் சில பிரச்சனையில் அகப்பட்டுள்ளது. இப்போது திருமணமான பிள்ளைகள் கணவன் மனைவி இருவரும் பிரிந்து வாழ்வதை கேள்விபடும்போது சாட்சிகெட்டுப்போனதே. இத்தனை கடன்கள் இருந்தும் பாஸ்டரின் ஆடம்பர வாழ்க்கையும், பாஸ்டருக்கென்று பாஸ்டரின் மனைவியின் ஆலோசனையின்படி ஒரு புதிய பெரிய பங்களா கட்டும் ஏற்பாடும் சபை மக்களை வெறுப்படைய செய்தன.

AG சபையின் தலைமை தலையிட்டது. பாஸ்டர்.ராஜாமணி அவர்கள், பாஸ்டர்.மோகன் அவர்கள் தலையிட்டும் பாஸ்டர் தன்னை சரிபடுத்த முயலவில்லை.

திருச்சி AG சபை உடைந்தது. இந்த சபையில் இருந்த ஒரு தம்பி இப்போது பாஸ்டராகி திருச்சியிலேயே தனி சபை நடத்துகிறார்.

# இதில் அறிய வேண்டியது

AG சபையின் பெயரில் உள்ள சொத்துக்கள் ஒரு தனிப்பட்ட பாஸ்டர் அல்லது ஒரு நபருடையதல்ல. அதை யாரும் **AG தலைமையின் கையெழுத்தில்லாது** விற்க முடியாது. அப்படியிருக்கும்போது சபையின் நிலத்தை 7 கோடிகளுக்கு பாஸ்டர் விலைபேசி பெரும்தொகையை அட்வான்ஸாக பெற்றுள்ளார். பணமும் கொடுத்தவர் பத்திரபதிவின்போது பாஸ்டர் தன்னை ஏமாற்றியதை கண்டுபிடித்தனர். இதில் சபை நிலத்தை வாங்கியவர்கள் பத்திரத்தை சரியாக பார்க்காமலே நிலத்தை விற்பவர் **பாஸ்டர்** என்பதால் அவர் பொய் பேசமாட்டார். ஏமாற்றமாட்டார் என்று நம்பி விட்டனர். அதனால் அவர்கள் பத்திரத்தை கவனிக்கவில்லை.

இதில் பாஸ்டர் நார்மன்னை மட்டும் குற்றம் சொல்லி பயன் இல்லை. வாங்கியவரின் அலட்சியமும் கவனக்குறைவும் தான். இந்த பிரச்சனைக்கு காரணம் பாஸ்டர்மேல்வைத்த அளவுக்குஅதிகமான நம்பிக்கைதான் காரணம் ஆகும். இதன் ஆணிவேர் எங்கு இருக்கிறது தெரியுமா? பாஸ்டர்பேசும் **அன்னியபாஷையும்** பொய்யான தீர்க்கதரிசனமுமாகும். பாஸ்டர் பேசும் அன்னியபாஷை அனைத்தும்பொய் என்பதை எப்போது அந்த AG சபையின் மக்கள் விளங்கிக்கொள்கிறார்களோ அப்போதுதான் திருச்சி AG சபை விழிப்புணர்வு பெரும்.

அதுவரை இப்படிப்பட்ட பெந்தகோஸ்தே சபைகளும் மக்களைஏமாற்றும், பெந்தகோஸ்தே சபை பாஸ்டர்களும் துணிந்து மக்களை ஏமாற்றிக்கொண்டேயிருப்பார்கள்.

இந்த விவகாரத்தில் முதலாவது ஏமாறியது **திருச்சி** (மேலப் புதூரில்) உள்ள ரியல் எஸ்டேட் நிறுவனம் ஆகும். இந்த ஏமாற்று வேலையை 2011ம் வருடமே பாஸ்டர் தொடங்கிவிட்டார். இந்த ரியல் எஸ்டேட் ஸ்தாபனம் பாஸ்டரோடு ஒப்பந்தம்செய்து 6 கோடியே

88 லட்ச ரூபாயை முதல் தவணையாக Bank வழியாக AG சபைக்கு செலுத்தியது. மீதி 12 லட்சத்தை வந்து பெற்றுக்கொண்டு நிலத்தை தங்கள்பெயருக்கு எழுதி தரும்படி **பாஸ்டர் நார்மனிடம்** கேட்டது. 12 லட்சத்தை வந்து வாங்கி கொள்ளுங்கள் என்று பலமுறை பாஸ்டரை அழைத்தும் அவர்களுக்கு பதில் கூறாமல் **பாஸ்டர் நார்மன்** ஒளிந்து ஒளிந்து தன்னை மறைத்துக்கொண்டதாக பேசிக்கொண்டார்கள்.

பாஸ்டரை தேடி கடன் கொடுத்தவர்கள் தொல்லை கொடுக்க தொடங்கியதால் சபை ஆதாரனைக்கு கூட பாஸ்டர் ஒழுங்காக வராமல் ஒளிந்து வாழ ஆரம்பித்தார். சபையை உதவி பாஸ்டர்கள் தான் நடத்தினார்கள். **பாஸ்டர்.நார்மன்** தன் தொலைபேசியையும் எடுப்பதில்லை. நார்மன் பாஸ்டர் பெருத்த **ஏமாற்றுக்காரன்** என மக்கள் விளங்கி கொண்டு பாஸ்டருக்கு எதிராக மதுரை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.

ஐகோர்ட் பாஸ்டர் மேல் FIR பதிவு செய்து போலிசிடம் விசாரிக்க உத்திரவிட்டது. முடிவில் பாஸ்டர்மேல் பணமோசடி வழக்கில் பதிவு செய்த குற்ற அறிக்கையை 5 நபர்கள்மீது தாக்கல் செய்யப்பட்டு FIRம் பதிவு செய்யப்பட்டது.

முதல் எதிரி

1). பாஸ்டர் நார்மன் பாஸ்கர்,

2). AG சபைஅங்கத்தினரான Mr.ஸ்டான்லிமாணிக்கராஜ்,

3). ஸ்டீபன் ஜெயகுமார்,

4). Mr. அபிரகாம்தாமஸ்,

5). Mr. மோகன் ஆகியோர் மீது திருச்சி குற்ற பிரிவு போலிசார் **மோசடி குற்றம்** பதிவு செய்தது.

போலீஸ்இன்ஸ்பெக்டர் திரு. பாலசுப்ரமணியன் அவர்கள் AG சபை மோசடி வழக்கை விசாரணை நடத்த தொடங்கி விட்டார்.

## AG சபையின் தலைமை செய்ய வேண்டியது

பாஸ்டர் நார்மன் பாஸ்கர் என்ற தலைமை பாஸ்டரை திருச்சி AG சபை பொறுப்பிலிருந்து நீக்கி வேறு தற்காலிக பாஸ்டர் வசம் AG சபையை ஒப்படைப்பது நல்லதாகும்.

காரணம் இந்த குறிப்பிட்ட AG சபையில் அருகில் உள்ள பல கல்லூரி மாணவர்களும், மாணவிகளும் ஏராளமாக ஆராதனைக்கு கூடுகிறார்கள்.

இவர்களுக்கு சபைக்குள் நடக்கும் இப்படிப்பட்ட ஏமாற்று வேலையைப்பற்றி தெரியாது. அந்த வாலிப பிள்ளைகளை வழிநடத்த புது பாஸ்டர் மிகவும் அவசியமாகும்.

அடுத்தது சபையில் விஷேச பணபிரிவு நடத்தி சபையில் பாஸ்டருக்கு கடனாக பணம் கொடுத்தவர்களின் கடன்களை முதலாவது கொடுத்துதீர்க்க வேண்டும்.

ரியல் எஸ்டேட் நடத்திய ஸ்தாபனம் கொடுத்த **கோடிகளையும்** திரும்ப கொடுத்து தீர்த்து **AG சபையின் மானத்தை காப்பாற்றினால்** தான் சபையின் சாட்சி கெட்டுபோகாமல் அதே இடத்தில் தொடர்ந்து சபை நடத்தலாம்.

**அன்னியபாஷை ஆராதனையில் அதிகம் சத்தமிடுதல்** ஆகிய மாயமாயமான செயலை **AG சபையின் மைய உபதேசமாக வைத்து நடத்தப்படுகிறது**. தமிழ்நாட்டில் பெரும்பாலான AG சபைகளில் இதைப்போன்ற பிரச்சனைகள் மிக அதிகம். ஆவியானவர் நம் உள்ளத்தில் வருவதே நம்மை **பரிசுத்தத்தில்** நடத்துவதற்காகத்தான். **பரிசுத்தம்** என்பது **விபச்சாரம் வேசிதனம்** இவைகளை விட்டுவிடுவது மட்டுமல்ல, பணவிஷயத்தில் உண்மையில்லாமை. **பணவிஷயத்தில்** வெளிப்படையில்லாமை. பணவிஷயத்தில் ஏமாற்று இவைகள்யாவும் **பரிசுத்த குலைச்சல்**தான் என்று ஒரு தேவபிள்ளை ஒருவர் ~~தன்~~ புத்தகத்தில் எழுதினார். அது எத்தனை உண்மை.

திருச்சி AGசபையில் பாஸ்டர்.நார்மன் அவர்கள் பணவிஷயத்தில் தன்னை மிகவும் நம்பின தன் சபை மக்களையே ஏமாற்றி விட்டாரே!. பாஸ்டரால் ஏமாற்றப்பட்டவர்கள் ஒருவர் இருவர் அல்ல. இத்தனை கோடிக்கணக்கான பணத்தை வஞ்ஜித்த இவரால் தான் வாங்கிய பணத்தை நிச்சயம் திருப்பிதர முடியாது. இத்தனை கடன்களில் மூழ்கியுள்ள திருச்சி AG சபை பாஸ்டரின் குடும்பத்தில் பாஸ்டரின் மனைவி ஒரு பெரிய பங்களா கட்டும் திட்டத்தில் இருக்கிறார் என்பதை கேள்விப்படுவது எத்தனை வேதனையான காரியம். இத்தனை கடன் பிரச்சனைகளுக்கும் பாஸ்டர்.நார்மன் அவர்களின் மனைவி முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. இவர் பாஸ்டரிடம் கூறிய தவறானஆலோசனையும், அவரின் தூண்டுதலும் தான் இத்தனை கடன்களுக்கும் காரணமாகும் என்று எனது சபையில் ஜெபிக்கும் பொறுப்பான பெண்களின் வாயிலிருந்து வரும்போது இதை நம்பாமல் இருக்க முடியாது.

பணகடனில் விழும் ஒருவர் பாலியல் Sex விஷயத்திலும் பலவீனமாக இருப்பார் என்பதற்கு ஆதாரமாக இரண்டு சம்பவங்கள் அந்த திருச்சி AG சபையில் நடந்துள்ளது.

= மற்றெந்த பெந்தேகோஸ்தே சபைகளை காட்டிலும் இந்தியாவில் மற்ற பெந்தேகோஸ்தே சபைகளை காட்டிலும் மிகவேகமாக வளர்ந்த சபையும் மிக அதிக எண்ணிக்கையில் பெருகின சபையும் AG பெந்தேகோஸ்தே சபைதான் என்றால் அது மிகையாகாது. வேறு IPC, TPM, Church of God இன்னும் பல பெயர்களில் உள்ள வேறு எந்த பெந்தேகோஸ்த்தே சபைகளும் இத்தனை வேகமாக வளர்ந்து பெருகினதில்லை.

ஒவ்வொரு ஞாயிறு காலை ஆராதனையிலும் பெரும்பாலான ஊர்களில் **CSI சபையிலிருந்து** AG சபைக்கு ஆராதிக்கபோகும் ஜனங்களின் எண்ணிக்கை தான் மிக அதிகம் ஆகும். பலருக்கு இப்படிப்பட்ட சபைகளில் காணப்படும் **பாட்டுகள்** இசை கருவிகளின் ஈர்ப்பு இவைகள் தான் ஞாயிறுஆராதனையில் கலந்து கொள்ளும் CSI, லுத்தரன் சபை மக்களை கவர்ந்ததாகும். ஆனால் அதன் உள்ளே நடக்கும் விஷயங்கள் வெளி உலகத்தில் உள்ளவர்களுக்கு தெரியவில்லை.

தமிழ்நாட்டில் உள்ள AG சபைகளில் சுமார் 11 இடங்களில்உள்ள AG சபையில் உள்ள பாஸ்டர்கள்மேல் பலவிதமான புகார்கள் வந்ததன் பேரில் அந்தந்த சபை பாஸ்டரிடம் சபைகளும் AG தலைமையினால் விசாரணைக்குட்பட்டிருக்கின்றன. அத்தனை சபைகளின் விவரங்கள் குற்றபட்டியல்களும் எனக்கு தெரியும்.

# சின்னமலை AG சபை

சென்னை சின்னமலை AG சபை பாஸ்டர் அவர்களின் மகன்நடத்தும் ஆராதனைகளில் நடக்கும் **நடனமும், ஆபாசமும் வரவர பெருகி கொண்டே** போகிறதாக அந்த சபையின் வாலிப பிள்ளைகளின் பெற்றோர்களின் குற்றச்சாட்டு ஆகும்.

பல பெரிய பிரச்சனைகளிலிருந்து **பாஸ்டர்.மோகன்** அவர்களே தலையிட்டு தன் மகனை விடுவித்தது பலர் அறிந்த விஷயம்தான். என்றாலும் இன்றைக்கும் பாஸ்டர் மோகனின் மகன் நடத்தும் ஆராதனைக்குபோகும் வாலிப பெண்களின் எண்ணிக்கை, மிகஅதிகம். அந்த ஆராதனையில் இவர்களை கவருவது **பாட்டும்,** நவீன வாத்தியகருவிகள் மட்டுமல்ல, அந்த ஆராதனையில் வாலிப பிள்ளைகள் ஒருவரோடொருவர் நெருங்கி பழகும் எல்லையில்லா சுதந்திரம் பல பிரச்சனைகள் உருவாக காரணமாக இருக்கிறது. இப்பிரச்சனை போலிஸ் விசாரிக்கும்அளவு வெளியரங்கமாகிவிட்டது. இது தொடர்வது நல்லதல்ல.

= **திருநெல்வேலியில்** உள்ள AG சபை பாஸ்டர் **J.J. செல்வின் வில்சன்** அவர்கள் இந்தியா வந்து பாளையம்கோட்டையில் குடியேறியநாள் முதல் அவர் எனக்கு நெருங்கிய நண்பராக இருந்தார். என் மேல் தனி மரியாதையும் அவருக்கு உண்டு.

அவர் நடத்தும் நித்திய பேரீன்பம் **கிருஸ்துவ திருமண தகவல்** மூலம் ஏராளமான திருமண ஏற்பாடுகள் நடந்துள்ளது. திருமணமாகாத பல நூறு பெண்கள் வாழக்கைக்கு **மணமகனை** தன் பத்திரிக்கைமூலம் காண்பித்து அந்த பெண்களின் வாழ்க்கைக்கு ஒளியேற்றி வைத்தார்.

ஆனால் தன் **மருமகளை** தன் மகனை விட்டு பிரித்துவைத்து விட்டாரே! இதில் பெரும் பங்கு அவரின் மனைவிக்கு உண்டு.

இப்படி சாட்சியில்லாத நிலையில் உள்ள தன்மகனை தன் AG சபையில் தனக்கு உதவி பாஸ்டராக நியமித்து தன் மகனையே **துதிஆராதனையும், பிரசங்கமும்** நிகழ்த்தி அவரை நிரந்தர பாஸ்டராக பயன்படுத்தி கொண்டிருக்கிறாரே! என்சாட்சிஇது? **AG சபையும்** இதை அனுமதித்தது.

**பாஸ்டர்.ராஜாமணி** அவர்களும் இவர்கள் கணவர் மனைவி பிரச்சனையில் ஆலோசகராக கலந்துகொண்டும் பிரயோஜனம் இல்லாமல்போனதே!

பாஸ்டர் செல்வின் அவர்களின் மகன் தன் ஊழியம் செய்யட்டும். ஆனால் AG சபை பாஸ்டராக, துதி ஆராதனை நடத்துபவராக வேதாகமத்தின்படி அனுமதிக்க கூடாதே!. அது AG சபைக்கு சபையின் மக்களுக்கு சாட்சியில்லையே.

இவர்கள் சபைக்குவரும் வாலிப பெண்களுக்கு - வாலிபருக்கு மகளின் குடும்ப வாழ்கை சாட்சியில்லையே! நானும் நேரில் சென்று எத்தனையோமுறை வசனத்தை எடுத்துச்சொல்லியும் AG பாஸ்டர் செவிசாய்க்கவில்லை!.

மகனும் என் ஆலோசனையை ஏற்கவில்லை. வேத வசனத்தை இவர்களை குடும்பமாக அமரவைத்து சுட்டிக்காட்டினேனே!. இவர்கள் வசனத்துக்கும் கீழ்படியவில்லை. இதனால் AG சபையை விட்டு வெளியேறியவர்கள் எத்தனை பேர்கள். ஆச்சரியம் என்னவென்றால் இப்போதும் அந்த சபை முன்பைவிட செழிப்பாக நடக்கிறது. நல்ல பாடல், உபவாச ஜெபம் **அன்னியபாஷை, தீர்க்கதரிசனம்** இவைகள் தான் CSI மக்களையும் இவர்கள் சபைக்கு கவர்ந்து இழுக்கிறது.

இவர்கள் சபையில் இந்து மதத்திலிருந்து சுவிசேஷம் கேட்டு இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனையோ பேர் உண்டு. இந்த பிரச்சனைகளை அவர்கள் அறியும்போது என்ன நினைப்பார்கள்? புறமதத்தருக்கு சுவிசேஷம் அறிவிக்க இவர்களுக்கு நேரம் ஏது! புறமதஸ்தர் அவர்களாக பார்த்து இப்படிப்பட்ட சபைகளில் வந்ததால் தான் உண்டு.

= **சென்னையில்** மட்டும் பல AG சபைகள் உண்டு. **பெங்களூர், வெல்லூர், சேலம், நாமக்கல் - இராசிபுரம். கேரளா** போன்ற பல இடங்களில் உள்ள AG சபைகள் பார்க்க, ஆராதிக்க CSI, லூத்தரன் சபைகளைவிட சிறப்பாக இருப்பதாகத் தான் தோன்றும். இவர்களிடம் அதிகம் நெருங்கி ஆழத்தில் சென்றால் கிருஸ்து வேண்டாம், கிறிஸ்துவ சபையும் வேண்டாம் என்ற வெருப்பு புதிய விசுவாசிகளுக்கு வந்து விடும்.

இத்தனை பிரச்சனைகளுக்கு இடையில் பிரச்சனைகளை தீர்த்துவைக்கும் AG சபைகளில் **தலைமையைப்பற்றிய** குற்றசாட்டுகளின் பட்டியல்களும் பக்கம்பக்கமாக அச்சடித்து அந்த AG சபை பாஸ்டர்களே அவர்கள் சபைகளுக்குள் வினியோகித்துக் கொண்டிருக்கிறார்கள். **மேய்ப்பன் எவ்வழியோ! மந்தைகளும் இவர்கள் பெற்ற பிள்ளைகளும் அதேவழி**! கர்த்தர்தான் இந்த சபை மக்களை வழிநடத்து வேண்டும்.

CSI-லூத்தரன் சபைகளின் பிஷப்மார்கள்கூட இவர்களோடு இந்த மாதிரி சாட்சியில்லாத விஷயத்தில் போட்டி போட முடியாது போலிருக்கிறதே!.

= எங்கள் சபையான CSI சபையிலும் குறிப்பாக **தூத்துக்குடி - நாசரேத்** திருமண்டலத்தில் தூத்துக்குடி மாவட்டம் **சாயர்புரம்** என்ற ஊரில் CSI சபை தலைமை போதகரும், டிஸ்ட்ரிக்ட் சேர்மேனுமான **Rev டேவிட்ஞானய்யா** அவர்களை பற்றி பள்ளிக்கூட ஆசிரியைகள், மற்ற பெண்கள், பெண் ஆயர்கள் எழுதியதும் நேரில் கூறி அரித்துமான பாலியல் குற்றசாட்டுகள் ஏராளம்.

அதில் பெண் ஆயர் ஒருவர் நான் பேசின கூட்டத்தில் கலந்து கொண்டு கண்ணீர்விட்டு அழுது கூறிய சம்பவங்கள், அந்த ஆயரின் பாலில் முயற்சியின் டார்ச்சர் ஆகியவைகளை ஒவ்வொன்றாக கூறி அழுத சம்பவம் இப்போது என் கண்முன்னே நிற்கிறது.

ஆயர் செய்யும் டார்ச்சர்படி தன் கணவனிடமும் கூற முடியாத சூழ்நிலை, தன் உறவினரிடம் உடன் பிறப்பினரிடமும் கூறியும் பிரயோஜனம் இல்லை. அந்த கால கட்டத்தில் பிஷப்பிடமும் குற்றச்சாட்டாக அறிவிக்க கூடிய நிலையில் பிஷப் இல்லை. தலைமை ஆயரின் தயவு தன் பதவி உயர்வுக்கு அவசியம். ஆகவே அவரை பணத்துக்கு கொள்ளமுடியாமல் அந்த பெண் ஆயர் தவித்ததவிப்பு கொஞ்சமில்லை.

எனக்கு பலர் அந்த ஆயரின் ஆசிரியைகளிடம் பெண்களிடம் பழகின புகைப்படங்களை ஆசிரியைகள் எழுதிய குற்றச்சாட்டு கடிதங்களையும் ஆதாரத்துடன் அனுப்பினார்கள். அப்படி அந்த நிர்வான புகைப்படங்களை எனக்கு அனுப்பியவர்கள் அதன் ஒரு காப்பியை அந்த ஆயருக்கும் அனுப்பி வைத்ததால் அவருக்கு என் மேல் மிகுந்த வெறுப்பு வந்தது.

**சாயர்புரம்** கூட்டத்துக்கு ஒருவருடத்துக்கு முன்பே அழைப்பு கொடுத்தவர் ஒருபெரும்பொய் கூறி கூட்டத்தை தேதியை மாற்றிதர தொலைபேசியில் கேட்டார். நானும் சம்மதித்தேன். உடனே தொலைபேசி மூலம் சாயர்புரம் சபை மக்களிடம் பேசினேன். அவர் கூறியது நூற்றுக்கு நூறு பொய் என்றும் சபை மக்கள் அவரை ஆராதனை நடத்தக் கூடாது என்று தடுத்து வைத்த விஷயத்தை எனக்கு அறிவித்தனர். அவர் தேதி மாற்றம் என்று கேட்டுக் கொண்டதின் காரணம் புரிந்தது.

இத்தனை காலம் அனுபவம் உள்ள குடும்பமும் பிள்ளைகளும் உள்ள ஆயர் இப்படிப்பட்ட பாலியல் **குற்றசாட்டுகளும், பண ஊழல் குற்றசாட்டுகளிலும்** அகப்பட்டும் மக்கள் பல புகார்களை பிஷப்புக்கு எழுதியும், இப்போதுள்ள பிஷப் கம்மிசரி அவர்களுக்கு எழுதியும் நடவடிக்கை எடுக்கவில்லை. காரணம் இப்போதுள்ள பிஷப்புக்கு இவர் ஆதரவு தேவையாக இருக்கிறது.

சட்டத்திருத்த மசோதா நிறைவேறியதாக பொய்யாக அறிவிக்கப்பட்டபின் ஆயர் அவர்கள் மேல் வந்த குற்றச்சாட்டுகள் மிக அதிகமாகிப்போனபடியால் திருமண்டல மக்களின் பார்வையில் கண்துடைப்பாக சில மாதத்துக்கு சஸ்பெண்ட் தற்காலிக பதவி நீக்கம் செய்து அறிவிக்கப்பட்டார்.

சில நாட்களிலேயே அந்த ஆயருக்கு கொடுக்கப்பட்ட தண்டனை வெரும் கண்துடைப்பு என்பது மக்களுக்கு விளங்குகிறது. காரணம் தண்டனை பெற்ற அதே ஆயர் இப்போது பிஷப்புக்கு அடுத்த ஸ்தாபனத்தில் Clergey Secretary யாக முழு **திருமண்டலத்துக்கும் பதவி உயர்வு** பெற்று விட்டார். தான்செய்த அத்தனை பாவங்களுக்கும் தவறுகளுக்கும் ஊழல்களுக்கும் மிகப்பெரிய பரிசாக பதவி உயர்வு பெற்றுவிட்டார். இப்பொது திருமண்டல அனைத்து ஆயர்களும் இவருக்கு கீழ்படிந்தாக வேண்டும். இனி ஆயர்கள் இவருக்கு அடிமைகளாக இருப்பார்கள்.

தூத்துக்குடி திருமண்டலத்தில் இப்போது நிலைக்கு இநத பதவி உயர்வு சம்பவம் ஒரு சிறு மாதிரிதான்.

தூத்துக்குடி திருமண்டலத்துக்காக ஒவ்வொரு நாளும் கண்ணீர் வடிக்கும் கூட்டம் ஒரு பக்கம். யாரை, திருப்திபடுத்தினால் பதவி உயர்வு, ஊழலில் பங்கு கிடைக்கும் எனது அலையும் கூட்டம் மற்றொரு மக்கள் இப்போது பல ஆயர்கள் நிம்மதியற்ற திருமண்டலத்தில் எந்தவொரு புது திட்டங்களோ தீர்மானங்களோ எடுக்க முடியாத நிலையில் ஒரு பெரும் மாற்றத்தை எதிர்பார்த்து இருக்கிறது.

தூத்துக்குடி திருமண்டலத்தில் புதிய மாற்றம் உண்டாக CSI சினாட்டில் புதிய **மாடரேட.டர்** பதவி ஏற்க வேண்டும். புது நிர்வாக கமிட்டி உருவாக வேண்டும். தூத்துக்குடி **புது பிஷப்** தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அப்போது மட்டுமே தூத்துக்கு-நாசரேத் திருமண்டலம் ஓரளவு செயல்படும் திருமண்டலமாக மற்றும்.

அதுவரை **மேய்யப்பன் இல்லா ஆடுகளாகத்தான் தூத்துக்குடி திருமண்டலம் செயல்படும் அது திருமண்டத்திற்கு நல்லதல்ல.**

இயேசுவை உண்மையாக ஏற்றுக் கொண்டவர்கள் மேலே கூறப்பட்ட பல்வேறு சபைகளில் காணப்படும் பிரச்சனைகள் CSI சபைகளில் காணப்படும் பிரச்சனை இப்படிப்பட்ட நிலையில் சபைகள் இயங்கும் போது உண்மையான ஆராதனைக்கு இந்த சூழ்நிலையில் எங்கு போவார்கள். எந்த சபைக்கு போங்கள் என்று நான் அறிமுகப்படுத்த முடியும். இவைகளை யோசிக்கும்போது மிக வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது.

**அன்னியபாஷை** என்ற பெயரில் ஆரம்பித்த பெந்தேகோஸ்தே சபைகளின் பொய் ஆராதனைத்தான் இவர்கள் சபை பாஸ்டர்களின் **போலியான வாழ்க்கைக்கும், பணவிஷயத்தில் பாஸ்டர்கள் விழுந்து போனதற்கு காரணம் ஆகும்.**

ஒவ்வொரு AG பாஸ்டர்களின் பிள்ளைகள் விலைக்கூடிய மோட்டார் பைக்குகளைத்தான் வாங்குகிறார்கள். இவர்கள் வாங்கும் மிக விலை உயர்ந்த கார்களின் எண்ணிக்கை சாட்சியை கெடுக்கிறது. எப்படி இவைகளை வாங்கினார்கள் என்ற கேள்வி சபை மக்களே கேட்கிறார்கள்?.


சபை மக்களிடம் **தசம பாகம்** என்ற பெயரில் ஏமாற்றி வாங்கிய **காணிக்கை பணத்தைக் கொண்டுதான்** விலை உயர்ந்த வாகனங்களை வாங்குகிறார்கள். திருச்சி AG சபை **பாஸ்டர் நார்மனிடம்** அவர் சபையின் **காணிக்கை வரவின் விவரம்** கேட்டுப்பாருங்கள். அவைகளை ஒருவருக்கும் தெரிவிக்க கூடாத இரகசியமாக வைத்துள்ளார்கள். **பொதுவாக** எந்த பெந்தகோஸ்தே சபைகளிலும் **காணிக்கை வரவு** கணக்கும் மட்டும் யாரும் கேட்கவும் கூடாது அவர்களுக்கு அதிகாரமும் இல்லை.

*********************************************************************

## என் வெளிநாட்டு ஊழியங்கள்:
### (MALAYSIA & AUSTRALIA)

| நாடு | தொடர்புக்கொள்ள | தொலைப்பேசி |
|---|---|---|
| **MALAYSIA** | Rev.HENDRY | 0060-1-019-2467 226 |
| 2016 NOV 1 to 6 - NOV 1 - **PENANG** , NOV -2 - **IPOH**, NOV -3 - **KULALUMPUR**, NOV - 4- **NEGERISEMBILAN,** NOV-5-**JOHOR** | | |
| **AUSTRALIA** | Mr.JAYAN CHRISOSTOM | - 409809002, 397422278(H) |
| 2016 NOV 9 to 13 | **(MALAYALAM)** - MELBOURNE | |
| 2016 NOV 17 to 20 | Bro.VINO APPATHURAI (**TAMIL)** - MELBOURNE) | EMAIL. VINOJIT@YAHOO.COM.AU |
| 2016 NOV 21 to 23 | Mr.THOMAS(MALAYALAM) - 0061-288248927 **SYDNEY** | |
| 2016 NOV 23rd to 29th | Bro.JOHN CUMARASAMY (**TAMIL**) - SYDNEY Email-jcumarasamy@optusnet.com.au | +61 418 962 911 |
| 2016 DEC 1 to 4 | Dr.CHARLES JEEVARAJ(PERTH) - 0061040548687 3 | |

# TPM சபை பாஸ்டர் மரணம்! கொலையா? மரணமா?



துாத்துக்குடியில் **மில்லர்புரம்** என்ற இடத்தில் உள்ள TPM(சிலோன் பெந்தேகோஸ்தே சபை) சபை **பாஸ்டர்.கனகராஜ்** (வயது 73) அவர்கள் அக்டோபர் சனி இரவு மரித்துப்போனார்.

இவர் தனது 17வது வயதில் வீட்டைவிட்டு வெளியேறி இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு **சிலோன் பெந்தேகோஸ்தே சபையில்** முழுநேர ஊழியராக இணைந்தார். இப்போது துாத்துக்குடியில் உள்ள TPM பெரிய சபைக்கு தலைமை பாஸ்டராக பொருப்பேற்றார்.

இவர் காலத்தில் துாத்துக்குடி சபை ஊழியம் சிறப்பாக நடந்தது. TPM சபை சட்டங்களை கடுமையாக பின்பற்றகூடியவர். அதனால் சபையில் சிலருக்கு அவரை பிடிக்காது. பலருக்கு அவர் சபை நடத்தும்விதம் பிடிக்கும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வெள்ளி இரவு திடீரென மரித்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

சென்னை TPM தலைமை சபையிலிருந்து தலைமை பாஸ்டர்கள், மற்ற கிளை சபை பாஸ்டர்கள், சபை மக்களும் திரண்டு வந்தனர்.

ஆனால் அடக்க ஆராதனைக்கு வந்தவர்கள்,அவர் உடலை பார்த்தவர்கள் அவர் மரணத்தில் சந்தேகப்பட்டனர். திடீர் இருதய வியாதியில் இறக்கவில்லை. **கழுத்தில் உள்ள காயம்,இரத்தகரைகள்** யாவும் காணப்பட்டதாக கூறகேட்டேன். அதன் அடிப்படையில் TPM சபையின் அருகே உள்ளவர்கள் **போலீஸ்க்கு** தகவல் அறிவிக்க அடக்க ஆராதனை நடக்கும் நேரத்தில் போலீஸ் வந்து உடல் வைக்கப்பட்டிருந்த சவ பெட்டியுடன் **அரசாங்க ஆஸ்பத்திரிக்கு** பரிசோதனைக்கு கொண்டு போய்விட்டனர். உடல் பாகங்கள் எடுக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு அதன்பின்தான் உடலை சபை மக்களிடம் ஒப்படைத்தனர். போலீஸிலிருந்து உடல் TPM சபைக்கு வந்து சேரும்முன் நுாற்றுக்கணக்கில் அடக்க ஆராதனைக்கு கூடிவந்த **பாஸ்டர்கள் யாவரும்** ஓடிவிட்டனர். சபையின் பல விசுவாசிகளும் போலீஸ் தங்களை விசாரிக்குமோ என்ற பயத்தில் போய்விட்டனர். நிலைமை எப்படி மாறிவிட்டது!. கர்த்தரின் ஊழியத்திற்கென்று திருமணம் செய்யாமல், தன் குடும்பத்தைவிட்டு முழுநேர ஊழியத்தை செய்த தலைமை பாஸ்டரின் அடக்க ஆராதனை எத்தனை துக்கரமாக முடிந்தது.

ஆவிக்குரிய சபை **பரிசுத்த ஆவியில் நிரப்பப்பட்ட சபை ஊழியக்காரிகள்**(Sisters), உதவி பாஸ்டர்கள், **அந்நியபாஷை,ஸ்தோத்திரம்,இயேசுவின் இரத்தம்** யாவும் மிக சத்தமாக கூச்சல்போடும் சபை தலைமை மேய்ப்பனின் மரணத்தில் கொலை சந்தேகம், இதன் இடையில் இராத்தியிலேயே பாஸ்டரின் அலறல் சத்தம் கேட்டதாக பரவிய வதந்திகள் இன்னும் சந்தேகத்தை அதிகமாக்கின.

பல வருடங்களுக்குமுன் இதே சபையில் **தலைமை பாஸ்டரால்** கர்ப்பம் தரிக்கப்பட்ட பெண்ணின் பிரச்சனை **வார பத்திரிக்கையில்** வெளியிடப்பட்டது. முதல் பக்கத்திலேயே பாவம் செய்த **பாஸ்டரின்** படத்துடன் அந்த செய்தி இடம் பெற்றது. அதன் **முழு விவரங்களையும்** ஜாமக்காரனில் எழுதியதை வாசித்திருப்பீர்கள்.

இந்த **பாஸ்டரின் மரணத்தை செய்தியாக மட்டும்** எழுத நான் நினைக்கவில்லை. இப்படிப்பட்ட பெந்தேகோஸ்தே சபைகள் பரிசுத்த ஆவியானவரை **அந்நியபாஷை** என்ற அடையாளத்தை தங்களுக்கு ஒரு **திரையாக வைத்து மறைத்து** உள்ளே **பரிசுத்த குலைச்சலும், கொலைகளும்** சர்வ சாதாரணமாக நடைபெறும் இப்படிப்பட்ட சம்பவம், நம் எல்லாருக்கும் எச்சரிப்பாக இருக்கவேண்டும் என்பதற்காக எழுதினேன்.

**வேத வசனம்** மட்டுமே நம்மை பக்திவிருத்தியில் வழிநடத்தும் **வேத வசனம் மட்டுமே** நம்மை பரிசுத்தத்தில் வழிநடத்தும். வேத வசனம் மூலம் இரட்சிக்கப்படுகிறவர்களுக்கு மட்டுமே பரிசுத்த **ஆவியானவரின் நிறைவு** கிடைக்கும். **அந்நியபாஷை** என்ற பெயரில் உளரும் ஒருவருக்கும் **பரிசுத்த வாழ்க்கையும்** கிடைக்காது. **சாட்சியுள்ள வாழ்க்கையும்** அமையாது என்பதை உணருங்கள்.

**தூத்துக்குடியில் இதே சபையில் பல ஆண்டுகளுக்குமுன் அந்நியபாஷை** பேச கற்பித்த பாஸ்டர்,தீர்க்கதரிசனம் உரைத்த பாஸ்டர் **வாலிப பெண்ணை கெடுத்து கர்ப்பமாக்கி** இன்று **பாஸ்டர் ஊழியத்திலிருந்து** நீக்கிவைக்கப்பட்ட நிலையில் ஊழியம் செய்யமுடியாமல் இப்போது இவர் புத்தகம் விற்றுக்கொண்டிருக்கிறார்.

இதே சபையில் அடுத்துஅடுத்து நடந்த சாட்சியில்லா சம்பவங்களை சம்பந்தப்படுத்தி யூகித்தால் பரிசுத்தஆவியின் நிறைவு பெற்றவர்கள், **அந்நியபாஷை பேசும் நபர்கள், தீர்க்கதரிசனம் சபையில் உரைத்த நபர்கள்** கொலைக்காரர்களாக எப்படி மாறினார்கள்?. அதுவும் தங்களை வழிநடத்தும் மேய்ப்பனையே கொலை செய்யும் அளவு என்ன ஒரு கொடூர புத்தி. உண்மையான ஆவியை பெற்றவர்கள் இப்படிப்பட்ட கொடூர பாவங்களையும், கொலையும் செய்வார்களா?. **பத்திரிக்கை** செய்திகளும்,**காவல்துறையின்** கண்டுபிடிப்பும் உறுதியானால் ஊழியத்துக்கென்று தங்களை ஒப்புக்கொடுத்த இந்த TPM சபையின் பெண் ஊழியர்காரிகள், உடன் பாஸ்டர்களில் சிலர், சபை விசுவாசிகள் இப்படி இவர்களில் **பலர் ஜெயிலில் காலம்** கழிக்கவேண்டுமே?.

தூத்துக்குடியில் மிகப்பெரிய TPM சபைக்கு மிகப்பெரிய கெட்ட பெயர் உருவாகிவிட்டதே!. இவர்கள் **பரிசுத்த ஆவியானவரை** கேலி பொருளாக்கியதின் பலனை பாஸ்டர்களாய், விசுவாசிகளாய் இப்போது அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

❖ **கேரளாவில் பத்தினம்திட்டா** என்ற இடத்தில் உள்ள இதே மாதிரி **சபை பாஸ்டர் கொலை** செய்யப்பட்டது நிருபணமாகி அது இன்றும் உறுதிப்படுத்தபடாத நிலையில் இன்னும் அந்த வழக்கு தொடர்ந்து நடந்துக்கொண்டிருக்கிறது. இந்த சபையில் நடந்த கொலைக்கு சபைக்குள்ளே உள்ள சில பணக்காரர்கள் உடந்தையாக இருப்பதால் நீதிமன்ற தீர்ப்பு நீண்டுக் கொண்டிருக்கிறது. சபையில் ஊழியக்கார சகோதரிகளுக்கும்,சபை பணக்கார நபர்களுக்கும்

உண்டான தொடர்பை பாஸ்டர் பார்த்துவிட்டார். அதனால் பாஸ்டர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

❖ **வாசகர்களுக்கு இதன்மூலம்** நான் சொல்லவிரும்புவது முதலாவது சரியான மனந்திரும்புதலை பெற்றுக்கொள்ளுங்கள். ஆவியானவர் ஆவலோடு அவராகவே உங்களுக்குள் வந்துவிடுவார். ஆவியானவர் எழுதி கொடுத்த **வேத வசனத்தை** முறையாக(ஆர்டராக) வாசித்து தியானிக்க பழகுங்கள். அப்போது வசனத்தின் மூலமாகவே, நீங்கள் வழிநடத்தப்படுவதை உணருவீர்கள். அப்படிப்பட்ட வசன அடிப்படை அனுபவம் உங்களுக்கு வந்துவிட்டால் **பொய்யான அந்நியபாஷை, தீர்க்கதரிசனம்,வெளிப்பாடு** இப்படிப்பட்ட செயல்கள் எத்தனை **பெரிய ஊழியர்களிடம் கண்டாலும்**, எத்தனை பெரிய **தலைமை பாஸ்டரிடம்** கண்டாலும், அது **போலி, அது ஏமாற்று** என்று **ஆவியானவரும் வேதவசனமும்** உங்களுக்கு அடையாளம் காண்பிப்பார். அதன்மூலம் ஆவியை **பகுத்தறியும் கிருபை** உங்களுக்கு கிடைத்துவிடும். ஆகவேதான் இதை ஆலோசனையாக அறிவிக்கிறேன்.

❖ தூத்துக்குடி **மில்லர்புரம் TPM சபை மக்களுக்காக** வருந்துகிறேன். பாஸ்டரின் குழப்பமான மரணம், பழைய பாஸ்டர்களின் பாவ ஜீவியம் யாவும் **சபை மக்களை** மிகவும் பாதிப்பை உண்டாக்கியிருக்கும். கர்த்தர்தாமே மில்லர்புரம் TPM சபை மக்களுக்கு **ஆறுதலையும் இப்படிப்பட்ட சாட்சியில்லா சம்பவங்கள்மூலம் ஆவிக்குரிய தெளிவையும்** பெற்றுக்கொள்ள ஊழியக்காரன் என்ற முறையில் நானும் ஜெபிக்கிறேன். **கர்த்தரே சபை மக்களுக்கும், உதவி பாஸ்டர்களுக்கும் ஆறுதலை அளிப்பாராக.ஆமென்.**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## மொபைலில் பேலன்ஸ் இல்லாமல் என்னிடம் பேசமுயலவேண்டாம்:

பலர் ஆலோசனை கேட்கவும், வியாதிக்காக ஆலோசனை பெற்று ஜெபிக்கவும் **மொபைலில்** என்னோடு தொடர்புகொள்கிறார்கள். வேத வசன ஆலோசனைக்கூறி, வைத்திய ஆலோசனையும் கூறி மொபைல் வழியாக ஜெபிக்க தொடங்கியவுடன் அவர்களின் மொபைல் துண்டிக்கப்படுகிறது. அதை அறியாமல் முழு ஜெபத்தையும் நான் கண்ணைமூடிக்கொண்டு ஜெபித்துவிடுகிறேன். ஜெபம் முடிந்தபின் **ஆமென்** சொல்ல எதிர்பக்கம் சத்தம் இல்லை. பிறகுதான் எப்போதோ அவர்கள் மொபைல் கட் ஆகியிருப்பதை அறியமுடிந்தது. மன்னிக்கனும் டாக்டர், **மொபைலில் பணம்** தீர்ந்துவிட்டது. மறுபடியும் பணம்போட்டு பேசுகிறேன். தயவுசெய்து மறுபடியும் ஜெபம் செய்யுங்கள் என்று கூறும்போது எனக்கு கோபம் வருகிறது. ஆனாலும் ஊழியக்காரன் நான் கோபப்படகூடாது. ஆகவே அவர்களுக்கு ஆலோசனையாக இனி மொபைலில் பணம் இருக்கிறதா என்பதை கவனித்தபின் என்னோடு பேசுங்கள். இப்போது மறுபடியும் ஜெபிக்க இயலாது. ஜெபம் கர்த்தருடன் பேசுவது, உங்களுக்காக நான் ஜெபித்து விட்டேன். கர்த்தரும் ஜெபத்தை கேட்டார். ஆகவே இனி உங்கள் காதுகள்கேட்க ஜெபிப்பது வீண். பலர் ஜெபத்துக்காக காத்திருக்கிறார்கள் என்று கூறி தொலைபேசியை வைத்துவிடுகிறேன்.

ஆகவே தொலைபேசியில் தொடர்புகொள்கிறவர்கள் நான் மேலே கூறிய ஆலோசனையை கவனித்து என்னோடு ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து ஜெபத்தை அலட்சியம் படுத்தும் விதத்தில் தொலைபேசியில் **பணம்(பேலன்ஸ்)** இல்லாமல் என்னிடம் பேச முயலவேண்டாம்.

# ஆளுகை செய்யும் தேவன் நமக்கு சவாலிடுகிறார்



வெற்றி பெறவேண்டும் என்ற ஆவல் மனிதருக்கு இருப்பதால், அவர்களை எதிர்த்து வரும் சவால்களை மேற்கொள்ள வல்லவர்களாயிருக்கின்றனர். ஆனால் வேறு வகையானதொரு சவாலை விசுவாசிகளாகிய நாம் சந்திக்க தேவன் விரும்புகிறார். இது நம் தலைமுறையினருக்கு நம் பொறுப்பைக் கண்டுக்கொள்வது நல்லது. IEM மிஷனரி ஸ்தாபகரான அருட்திரு. முனைவர். **தியோடர் வில்லியம்ஸ்** அவர்கள் இந்த சவால்களைக் கீழ்வரும் வசனத்தின் மூலம் பட்டியலிடுகிறார். "உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் . . . " (லூக்கா 19 : 42)

இந்த நவீன யுகத்தைக்குறித்து பல காரியங்கள் கூறப்படுகிறது. வழக்கம் போல, சிலர் எதிலும் நலம் காண்கிறவர்களாகவும், சிலர் சந்தர்ப்பவாதிகளாகவும், சிலர் சந்தேகம் நிறைந்தவர்களாகவும், இன்னும் சிலர் தங்கள் **வன்முறைகளால்** தாங்கள் நினைக்கும் கற்பனை உலகத்தை உருவாக்க முயல்பவர்களாகவும் உள்ளனர். ஆளுகை செய்யும் தேவன் எல்லா தலைமுறைகளிலும் தமது செயல்திட்டத்தை அதன் அதன் காலத்தில் நிறைவேற்றுவதை யாராலும் தடம் புரளச் செய்ய முடியாது.

தெரிந்துக்கொள்ளப்பட்ட ஜனமாகிய இஸ்ரவேல் தன் பொறுப்பை நிறைவேற்ற தேவன் அவ்வப்போது அதை அழைக்கிறார். தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் கடிந்து கொள்ளுதலின் பின்பும் கர்த்தருடைய காரியங்களில் கருத்து செலுத்துவதாக இல்லை. ஆகையால் கர்த்தர் மிகுந்த வேதனையோடு எருசலேமைப் பார்த்து கண்ணீர் சிந்தி, **"உனக்கு கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தார் யானால் . . . . ."**(லூக்கா 1: 42) என கூறுகிறார். எருசலேமின் பிரச்சனை என்னவென்றால், அதற்கு கிடைத்த நாளை - அதற்குக் கிடைத்த தருணத்தை அடையாளம் கண்டுக்கொள்ளவில்லை.

**நமக்கோ இது தீவிரமாக அர்ப்பணிக்கும் நாள்** ஆகும். கிறிஸ்துவின் சீடர்களாகிய நமக்கு இது ஒரு **வாஞ்சை மிகுந்த அர்ப்பணிப்பின் நாள்,** நான் ஏன் **"வாஞ்சை மிகுந்த அர்ப்பணிப்பு"** என்று கூறுகிறேன் என்றால் அர்ப்பணிப்புகளுக்கு மேல் அர்ப்பணிப்பு அனேகம் உள்ளன. கிறிஸ்தவ ஐக்கியங்களில் மகிழ்ந்து, பல்லவிகள் பாடி நம்மையே மகிழ்வித்து அதனோடு நின்று விடுகிற ஒரு வித அர்ப்பணிப்பு நமக்கு உண்டு என்று நன்றாகத் தெரியும். ஆனால் நம்முடையது **இரத்தசாட்சிகளின் விசுவாசம்** ஆகும். அதன் அடையாளம் சிலுவை. அதன் நினைவுசின்னங்கள் அடிநில கல்லறைகள். ஆகவே நாம் இதை சொகுசு மதமாகவோ,கைநழுவும் மக்களின் வசதியான அடைக்கலமாகவோ மாற்றிவிடவேண்டாம். கிறிஸ்துவுக்கு தேவையானவர்கள் சிலுவை வீரர்கள் - சாக்லட் வீரர்கள் அல்லர் அனேக நேரங்களில் நம் அர்ப்பணிப்பும், சீஷத்துவமும் கிரயம் செலுத்தத் தேவையில்லாதவைகளாக இருக்கின்றன. 1நாளா . 2:24-ல் தாவீது,

நான் உன்னுடையதை இலவசமாய் வாங்கி, கர்த்தருக்கு சர்வாங்க தகனத்தைப் பலியிடாமல் . . ." என்று கூறுகிறார். உறுதியான அர்ப்பணிப்பு விலையுள்ளது. அதன் கிரயத்தை கணக்குப் பார்க்க அழைக்கப்படுகிறோம். நம் ஜெப வாழ்க்கை, கொடுத்தல், கிறிஸ்துவிடம் நாம் **சரணடைதல்** ஆகியவை நமக்கு கிரயமாக இருக்கிறது நாம் அதை செலுத்த வேண்டியதாய் இருந்திருக்கிறதா? நாம் ஜெபித்து, நோவை அனுபவிப்பது வரைக்கும் கர்த்தருக்குக் கொடுக்கிறோமோ? அவர் எங்கே அழைக்கிறாரோ அங்கு விசுவாசத்துடன் செல்ல தைரியம் கொள்ளுகிறோமா? நாம் இவற்றிக்கு கீழ்ப்படிந்தால் அவருடைய மகிமைக்கென தருணங்களை கர்த்தர் நமக்கு கொடுப்பார்.

**நமக்கு இது சவாலின் நாள் :** உலகிலேயெ பெரிய ஊழிய பணிக்களமாக ~~இன்னும் இந்தியா உள்ளது.~~ பலவிதமான சவால்விடும் தேவைகள் மத்தியில் நாம் வாழ்கிறோம். இந்த தேசத்தின் அதிகமான மக்கள் கிராமங்களில்தான் வாழ்கின்றனர். இவர்களில் சிலர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தை ஒருமுறைகூட கேள்விப்படாதவர்கள். ஒரு அருங்காட்சியத்துக்கு சில கிராமவாசிகள் மரத்தில் செதுக்கப்பட்ட ஒரு உருவத்தைச் சுற்றி நின்றுகொண்டிருந்தனர். ஒருவர், **"இது யார்?"** என்றும், மற்றொருவர் "இது ஒரு **கடவுளா?"** எனவும் மூன்றாமவர், "ஏன் இவர் இவ்விதம் தொங்கிக் கொண்டிருக்கிறார்?" எனவும் வினவினர். அவர்கள் யாவரும் சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவின் உருவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர். என்ன கண்டனம்! என்ன சவால்! இயேசு 2000 ஆண்டுகளுக்கு முன்னால் மரித்து, உயிர்த்து இன்றும் இயேசு வாழ்கிறார். ஆனால் **என் நாட்டிலும் உள் நாட்டிலும் வாழும் மக்கள் இவர் யார்** என அறியாமல், ஏன் சிலர் மரித்தும் இருக்கின்றனர் இன்றும் இயேசு யார்? என்று அறியாமல் இருக்கின்றனர். இது சவால்தானே?, மத். 24 :14 ல் நம் ஆண்டவர் தெளிவாக ராஜ்யத்தின் நற்செய்தி உலக முழுவதிற்கும் சாட்சியாக எல்லா ஜனங்களுக்கும் பிரசங்கிக்கப்படவேண்டும். பின்புதான் உலகத்துக்கு முடிவுவரும் என கூறியுள்ளார். **தனிமனிதனாகவும்,கூட்டாகவும்** நற்செய்தியை அறிவிப்பதில் நாம் ஈடுபடாவிட்டால் **ஆண்டவரின் வருகையை** எவ்விதம் நாம் துரிதப்படுத்த முடியும்? இது உண்மையாகவே ஒரு பெரிய சவால்!

**நமக்கு இது ஒரு செயல்புரியம் நாள்:** எவ்விதமாக செயல்படுத்தவேண்டும்? மூடி வேதாகம சங்கத்தைச் சார்ந்த வில்லியம் ஹீட்டன், "ஒரு காலத்தில் கிறிஸ்தவர்கள் போர் வீரர்களாயிருந்தனர். இப்போது சுற்றுலா பயணிகளாக மாறிவருகின்றனர். ஒரு காலத்தில் **சிலுவைவீரர்,** இப்போது அவர்கள் மதிப்புள்ள நிலச்சுவான்தார்களாக இருக்கிறார்கள்" என்கிறார். இது எவ்வளவு உண்மை! ஒவ்வொரு மிஷனெரி ஊழியரும் "உலகமெங்கும் சென்று படங்கள் எடுத்து ஒவ்வொரு **மனிதருக்கும்** அதை அனுப்பி கடிதம் எழுதுபவர்களாக மாறி குறைந்துவிட்டனர். இயேசுகிறிஸ்துவின் இறுதி கட்டளையின் விபரீதமான நடைமுறை இது! சபையின் முக்கிய பகுதி **சமூக நற்செய்தியைப் பரப்புவதில் கவனம்** செலுத்தும் போது, உலகத்தின் எல்லைகள் வரைக்கும் இரட்சிப்பின் செய்தியை பறைசாற்றும் அறைகூவல் வருகிறது. அதோடு **நீங்கள் சமூகத்திற்கும்,மக்களுக்கும் அன்புக்கூர்ந்து சேவை செய்யும்** பொறுப்பையும் விட்டுவிடாமல், அதேநேரத்தில் நம்

முக்கிய வேலை, எல்லா மனிதவேதனைகளுக்கும் பதிலாகிய நற்செய்தியைப் பிரசங்கிப்பதே ஆகும் என்பதை நாம் உறுதிசெய்யவேண்டும். ஆகவே தான் பவுல் ரோமர் 1:16ல் "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படடேன்: முன்பு யூதரிலும் : பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது" என்றார்.

**நமக்கு இரு தருணத்தின் நாள் :** எதிர்ப்புகளும், தடைகளும் கூடிக் கொண்டிருந்தாலும் நற்செய்தி அறிவிக்க தருணங்கள் இன்னும் உள்ளன. மிஷனெரி சரித்திரத்தில் உபத்திரவத்தின் காலங்களில் தான் அதற்கு அதிக தருணங்கள் உள்ள நாட்களாகவும் இருந்திருக்கிறது. இவ்வித தருணங்களில் நற்செய்திப் பணிகள் முடக்கப்படுவது வேதனைக்குரியது. தேவை பின்வாங்குவதல்ல. புத்தியோடு செயல்படுவதே கட்டமைப்புகள் கைவிடலாம்: பொறுப்பான பதவிகள் கைமாறலாம்: ஆனால் நிச்சயமாகவே தருணங்களை விட்டுவிடவோ, ஒவ்வொருவருக்கும் நற்செய்தியை அறிவிக்கும் பொறுப்பை நழுவ விடவோ செய்வத்றகு இது நேரமல்ல. "காற்றைக் கவனிக்கிறவன் விதைக்கமாட்டான்: மேகங்களை நோக்குகிறவன் அறுக்கமாட்டான்" என பிரசங்கி 11 : 4 கூறுகிறது. ஆதித்திருச்சபை கர்த்தரின் கட்டளைக்குக் கீழ்ப்படிய காற்றையோ, காலநிலையையோ நோக்கவில்லை.

**ஆகவே இது ஒரு ஈடுபடும் நாள் : ஈடுபடுதல்** என்றால் என்ன? **சார்லஸ் பேட்ஸ்** ஒருமுறை **Dr. கூப்பர்** என்ற ஒரு மிஷனெரிக்கு. " ஊழியத்தில் 5.000 டாலர்கள் உபயோகிக்க முடியுமா?" என கடிதம் எழுதினார். தொடர்ந்து அனேக பொருள்களையும் அவருக்கு அனுப்பி தன் பெயர் வெளிவரக்கூடாது என கூறினார். திரு. பேட்ஸ் அவர்களின் மரணத்திற்குப் பின், **Dr.கூப்பர்** இறுதிவரைக்கும் அவர் எழுதிய நாட்குறிப்பேட்டைப் பார்த்தார். பணித்தளங்களிலிருந்து அவர் **பெற்றுக்கொண்ட காணிக்கை பொருள்கள்** ஆகியவைகளை கொடுத்தவர்களின் பெயர்களின் நீண்டபட்டியல்கள் இருந்தது. அதோடு அந்த ஊழியங்களுக்காக ஒரு முறையோ பலமுறைகளோ ஜெபித்தவர்களின் பட்டியல்களும் இருந்தது. அந்த பட்டியலில் 27,994சீனர்களும்,16,170 ஆப்பிரிக்கரும், 9,533 இந்தியர்களும் 6000 ஜப்பானியர்களும் இருந்தனர். அவருடைய காணிக்கை 26,000 டாலர்கள். அவர் மரித்தபின் அவர் விட்டுச்சென்ற பணத்தில் ஒரு நல்ல கார்கூட வாங்கமுடியாது! இதுதான் ஈடுபாடு! மிஷனெரி அழைப்பு எல்லாருக்கும் வருவதல்ல. ஆனால் மிஷனெரி ஈடுபாடு எல்லா விசுவாசிகளுக்கும் இருக்க வேண்டும். **"பின்பு யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான் : இதோ அடியேன் இருக்கிறேன். என்னை அனுப்பும் என்றேன்"** (ஏசா. 6 : 8) கர்த்தரின் சத்தம் இப்போதும் நம்மை ஈடுபட அழைக்கிறது நாம் **"இதோ அடியேன் . . ."** என்று பதிலளிப்போமா?.

கர்த்தரின் ஆளுகை **ஒவ்வொரு தலைமுறையினரையும்** எல்லா மொழி பேசுகிறவர்களையும் உள்அடக்கும் (வெளி . 7 : 9) உலகம் **உச்சக் கட்டத்தை நெருங்கிச்** சென்று கொண்டிருக்கிறது. ஆளுகை செய்யும் கர்த்தர் **நம் காலத்தில், நம் தலைமுறையில்** நாம் மிஷனிரி பணியில் ஈடுபட **நமக்கு சவாலிடுகிறார்.** ***************

# அந்நியபாஷை குழப்பம்

**இதுவரை நான் அந்நியபாஷை விவரங்களை வசனத்தோடும், உங்கள் அனுபவத்தை பதிவு செய்தும் நீங்கள் பாஷையில் பேசியதை சோதித்துப்பாருங்கள். அது தேவகோபம் உங்கள்மேல் வராமல் இருக்க உதவும். இதை உங்களுக்காக முக்கிய விஷயமாக குறிப்பிட்டு எச்சரிக்கிறேன். வாக்குவாதம் செய்யாதபடி உங்களை நீங்களே பரிசோதித்து முடிவெடுங்கள். கீழே உள்ள வசனம் அந்நியபாஷையைக்குறித்து எழுதப்பட்டதல்ல.**

இந்த யோசனையும், இந்த கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானல் ஒழிந்துபோம், தேவனால் உண்டாயிருந்ததேயானால் அதை ஒழித்துவிட உங்களால் கூடாது. தேவனோடே போர் செய்கிறவர்களாய் காணப்படாதபடிக்கு பாருங்கள். அப் 5:38,39

**OCTOBER 2016**

# Printed Book/Book Post

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.